**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**MCOP. No.310/2024**

2026–ம் வருடம் ஜனவரி திங்கள் 20–ம் நாளன்று மனுதாரர் தரப்பு சாட்சியாக ம.சா.2 வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி) திரு.கமல்ஹாசன், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: பிரபாகரன்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் 3 ஆம் தரப்பினர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். ம.சா.2 பிரபாகரன் பெயரில் உள்ள ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி உத்திரவாக வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் விபத்து குறித்து காவல்துறையில் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் நான் மனுதாரர் வீட்டிற்கு தகவல் கொடுத்தேன். இறந்துபோன நபரும் நானும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் அவர்

இறப்பிற்கு முன்பு 3, 4 ஆண்டுகளாக தெரியும். விபத்து சமயத்தில் விபத்தில் இறந்துபோன பூபதி யமஹா இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார். கிழமேல் சாலையில் வடக்கு பக்கத்தில் விபத்து நடந்தது. விபத்து சமயத்தில் பூபதி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்தார். விபத்து நடந்த இடம் பேருந்து நிறுத்தம் ஆகும். அங்கு பொறியியல் கல்லூரி உள்ளது என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் பேருந்து நிறுத்தத்தில் அரசு போக்குவரத்து கழக பேருந்து நின்று இருந்தது என்று சொன்னால் சரிதான். நான் விபத்து சமயத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நான் பூபதியின் இருசக்கர வாகனத்திற்கு பின்னால் டாடா ஏசி வண்டியில் சென்றேன். விபத்து சமயத்தில் பூபதி பேருந்து நிறுத்தத்தில் நின்றிருந்து அரசு பேருந்தை முந்தி சென்றார் என்று சொன்னால் சரிதான். மேலும் அதற்கு முன்பாக இருந்த காரையும் பூபதி முந்தி சென்றார் என்று சொன்னால் பேருந்தை பூபதி முந்தி செல்லும்போது தான் விபத்து ஏற்பட்டது. காவல்துறையினர் என்னை விசாரிக்கவில்லை. இறந்துபோன பூபதி பேருந்து நிறுத்ததில் நின்றிருந்த பேருந்தையும், ஒரு காரையும் முந்தி செல்லும்போது தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் பேருந்தை முந்தி செல்லும்போது தான் விபத்து ஏற்பட்டது. நீங்கள் சம்பவ இடத்தில் இல்லாததால் தான் விபத்து குறித்து உங்களால் சரியாக சாட்சியம் அளிக்க இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு பிறகு பூபதி உயிருடன் இறந்தார். விபத்து சமயத்தில் யார் காவல்துறையினருக்கு புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. புகாரின் மேல் நடவடிக்கைகள்

குறித்து எனக்குளதுவும் தெரியாது. பூபதி காரின் மீது மோதி தான் விபத்தில் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். அந்த காரின் பதிவு எண் TN 47 M 8181. விபத்து குறித்த வழக்கில் நான் சாட்சியம் இல்லை அது பற்றி எனக்கு தெரியாது. முந்தி செல்லும்போது பூபதியின் இருசக்கர வாகனம் பேருந்தின் மீது மோதவில்லை. நீங்கள் சொல்வது போல் சொன்ன விதத்தில் விபத்து நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நடந்த சம்பவம் குறித்து நீங்கள் அரைகுறையாக சாட்சியம் அளிப்பதால் உங்கள் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் உங்கள் சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக மனுதார் அதிக நஷ்டஈடு பெற வேண்டும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.20 17:15:11 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.